# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்**, இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 123/ந/2024
நாள் 25.03.2025

திரு. வ. கணேசன்,
தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
தேவகோட்டை நகராட்சி, சிவகங்கை மாவட்டம் – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கைலாசநாதபுரம் மேற்கு, கதவு எண். 12–ஜி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வ. கணேசன் என்பவரின் 13.04.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2024 அன்று பெறப்பட்டு, 123/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கைலாசநாதபுரம் மேற்கு, கதவு எண். 12–ஜி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வ. கணேசன் என்பவர் தனது 13.04.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

“நான் வசித்து வரும் சம்பந்தப்பட்ட இடத்தின் வழியாக செல்லும் சாலை (சர்வே எண். K-17-66)–ல் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணிகள் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தினர் கடந்த 23.09.2023 அன்று தொடங்கினர்.

இவ்வேளையில் சம்பந்தப்பட்ட சாலை அமைப்பதற்கு என்னுடைய பட்டா இடத்தில் மேலும் யாதொருவரும் இட ஆக்கிரமிப்பு செய்யாவண்ணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தேவகோட்டையால் வழங்கப்பட்ட நிரந்தர உறுத்து கட்டளை (முதலேற்பு வழக்கு எண்.10/98) உள்ள இடத்தினை நகராட்சி நிர்வாகத்தினர் ஆக்கிரமிப்பு செய்து சாலை அமைப்பதற்கு முற்பட்டு வருவதை தடுக்க வேண்டி உயர்திரு மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மற்றும் நகராட்சி ஆணையர், தேவகோட்டை அவர்களுக்கும் மின்னஞ்சல் வழியாக அளித்த புகார் மனுக்கள் (மனு எண். 0002/GCP-2003, நாள் 25.09.2023 மற்றும் மனு எண். 0001/GCP-2003, நாள் 23.09.2023) மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதற்கிடையில் கடந்த 26.09.2023 நகராட்சி அலுவலக பொறியாளர் ஆகிய திரு. மீரான்அலி என்பவர் சம்பந்தப்பட்ட என்னுடைய பட்டா மனை இடத்தை எனக்கு எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஆக்கிரமித்து சாலை அமைத்ததோடு அல்லாமல் எதிரில் வசிக்கும் சாலையையே ஆக்கிரமிப்பு செய்து மாளிகைகள் கட்டி வாழ்ந்து வரும் அதிகார வர்க்கத்தினருக்கு ஆதரவாக செயல்படும் இவர் எனது கோரிக்கைகளை ஒரு பொருட்டாக கருதாமல் நான் கை காட்டும் இடத்தில் தான் சாலை அமைக்கப்படும் என்றும், மேலும் காவல் துறையினரிடம் கூறி

அடித்தொழித்து விடுவேன் என்று எங்களையே மிரட்டியதோடு, நீங்கள் எங்கு வேண்டுமென்றாலும் செல்லுங்கள் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்றும், எதிர்தரப்பில் வசிப்பவர்களின் இடத்தினை அளந்து பார்க்க கூட திராணி இன்றி என்னுடைய பட்டா மனை இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து சாலையை அமைத்து விட்டார்கள்.

இந்த நிலையில் இது தொடர்பாக நகராட்சி ஆணையரை அலுவலகத்தில் கடந்த **26.09.2023** அன்று நேரிடையாக சந்திக்க முடியாததாலும் கைப்பேசி வழியாக அழைத்தும் எந்தவொரு தொடர்பும் கிடைக்காததாலும் நகராட்சி பொறியாளர் திரு. மீரான்அலி அவர்களின் அதிகார ஆணவ போக்கு குறித்த புகார் மனுவானது மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் பகிரி மூலமாக கடந்த **26.09.2023** அன்று நகராட்சி ஆணையருக்கு அளிக்கப்பட்டது.

மேலும் இந்திய இறையாண்மைக்கும் அதன் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு நேர்மையாக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தனது கடின உழைப்பால் ஈட்டிய பொருளாதாரத்தைக் கொண்டு, இந்த மனை இடத்தை வாங்கிய எனது தகப்பனார் முறையாக வரிவகையராக்களை செலுத்தி வந்ததோடல்லாமல், அந்த இடத்திற்கான பட்டா சிட்டா போன்ற வருவாய் துறை ஆவணங்களையும் பெற்றுள்ளார்.

கடின உழைப்பு என்றால் என்ன, நேர்மை என்றால் என்ன, அதன் மூலம் ஈட்டும் பொருளாதாரம் என்றால் என்ன என்பதை தனது பரம்பரையிலும் அறியாத அதிகார மற்றும் ஆணவ திமிரின் உச்சத்தில் என்னுடைய பட்டா மனை இடத்தினை நான் எந்தவொரு இடைஞ்சலும் இன்றி அனுபவிக்க கூடாது என்ற கேடுகெட்ட எண்ணத்துடன் வேண்டுமென்றே செய்யப்பட்ட இந்த செயல், நான் என்னுடைய பட்டா மனை இடத்தினை எந்தவொரு இடைஞ்சலும் இன்றி அனுபவிக்க முதலேற்பு வழக்கின் (முதலேற்பு வழக்கு எண்.10/98) வாயிலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டையால் வழங்கப்பட்ட நிரந்தர உறுத்து கட்டளை உத்தரவிற்கு எதிராகவே உள்ளது.

இந்நிலையில் தான்தோன்றி தனமாக என்னுடைய பட்டா மனை இடத்தினையும் சேர்த்து நகராட்சி நிர்வாகத்தினரால் அமைக்கப்பட்ட சாலை பற்றிய தகவல்களை பெற தகவல் பெறும் உரிமைச் சட்டம் **2005**–ன், பிரிவு **19 (1)** கீழ் முறையே **24.05.2023** மற்றும் **25.03.2024** அன்று முதல் மேல்முறையீடாக உயர்திரு நகராட்சி ஆணையர் தேவகோட்டை அவர்களுக்கு அனுப்பப்பட்ட மனுவுக்கு வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியுடன் இதுநாள் வரை எந்த தகவலும் வழங்கவில்லை.

இந்த விவரங்கள் எல்லாம் நன்றாக தெரிந்தே இவர்கள் என்னுடைய பட்டா மனை இடத்தினில், நான் அகிம்சை வழியில் எவ்வளவோ முயன்றும், எனது பக்கம் உள்ள நியாயத்தை சிறிதும் சீர்தூக்கிப் பார்க்காமல், கேடுகெட்ட எண்ணத்துடன் திட்டம் போட்டே மிகுந்த காழ்ப்புணர்ச்சியுடனும் என்னால் இவர்களை என்ன செய்துவிட முடியும் என்ற அதிகார திமிர் மற்றும் அது தரும் ஆணவத்தோடும் நான் அளித்த புகார் மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் இன்றி, எதேச்சதிகாரமாய் இந்த நகராட்சி நிர்வாக அதிகாரிகளாகிய நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் சாலையை அமைத்து விட்டனர்.

தேவகோட்டை நகராட்சியினர் சட்டவிதிமுறைகளுக்கு எதிராக என்னுடைய பட்டா மனையிடத்தை ஆக்கிரமித்து சாலை அமைத்து எனக்கு மற்றும் என் குடும்பத்தினரை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கியும், பொருளதார ரீதியாக சொல்லொணா துயரத்தை உருவாக்கியும், மிகுந்த காழ்ப்புணர்ச்சி மற்றும் உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே தேவகோட்டை நகராட்சி அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர்.

எனவே, கனம் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ஆகிய தாங்கள் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தினரின் சட்டவிதிமுறைகளுக்கு எதிரான இந்த ஆக்கிரமிப்பினை தடுத்து என்னுடைய பட்டா மனையிடத்தை மீட்டு தர வேண்டியும் மற்றும் சட்டவிதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்ட தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தினர் மீது துறைரீதியான விசாரணை மற்றும்

ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டியும் தங்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தேவகோட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 02.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி ஆணையர் தனது 24.09.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"1. புகார் மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவரால் குறிப்பிடப்படும் சாலை வார்டு எண்.24, கைலாசநாதபுரம் பகுதியில் 15வது மானிய நிதி 2023–2024ம் ஆண்டிற்காக 18.70 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பணி நடைபெறும் பொழுது திரு. வ. கணேசன் என்பவரது மனை இடத்தில் சாலை அமைக்கப்பட்டது தொடர்பாக, அன்னாரால் எவ்வித மறுப்பும் அவரது உரிமை ஆவணங்களை காட்டி எழுத்து பூர்வமான மனுக்கள் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

3. மேற்கண்ட புகார் மனு குறித்து தேவகோட்டை நகராட்சி பொறியாளர் திரு. நை. மீரா அலி என்பவர் தனது விளக்கத்தில் "வார்டு எண்.24, கைலாசநாதபுரம் பகுதியில் 15–வது மானிய நிதி 2023–2024–ஆம் ஆண்டிற்கான சாலைப்பணி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.18.70 லட்சம் பேக்கேஜ் – III–ல் இரண்டு பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு அதில் ஒரு சாலை பணியானது கைலாசநாதபுரம் மேற்கு சிமெண்ட் சாலை பணியானது மனுதாரர் குறிப்பிடும் சாலையாகும்.

இப்பகுதி தேவகோட்டை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் முழுமையான குடியிருப்பு பகுதியாகும். நகர்மன்ற ஒப்புதல் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் மூலம் நிர்வாக அனுமதி பெற்று உரிய முறையில் ஒப்புதல் பெறப்பட்டு இப்பணி நல்ல முறையில் செய்யப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

மேலும் இச்சாலையானது ஏற்கனவே உள்ள பழுதடைந்த சாலையின் மீது உள்ளதை உள்ளது போல அப்படியே எவ்வித ஆக்கிரமிப்பு இல்லாமல் அமைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் குறிப்பிடும் ஆக்கிரமிப்பு சம்மந்தமாக நகரமைப்பு அலுவலர் நகர்சார் ஆய்வாளரின் குறிப்பின்படி பல ஆண்டுகளாக மக்களின் பயன்பாட்டில் உள்ள பூஸ்திதி பாதை என உள்ளது என்றும், இதில் எவ்வித ஆக்கிரமிப்பு இல்லை என தெரிவித்துள்ளார். மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்தினை பார்வையிடும் பொழுது மனுதாரரின் வீட்டு காம்பவுண்டு உள்ளது. காம்பவுண்டு ஒட்டியே சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்ற விபரத்தினையும், 40 முதல் 50 ஆண்டுகள் மக்களின் பயன்பாட்டில் உள்ள இச்சாலை புதுப்பித்து புது சாலையினை அப்பகுதி மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் தரமாக ஆக்கிரமிப்பு ஏதுமின்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு 04.09.2024–ம் தேதியன்று கடிதம் மூலம் ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற உருத்து கட்டளை ஆவணங்கள் ஏதேனும் இருந்தால் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் இதுவரை நேரில் பார்த்ததே இல்லை. பொதுமக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட சாலையினை அப்பகுதி தூய்மை பணியாளர்களின் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்ட தரமான சாலையில் சென்று வருவதை மனதளவில் ஏற்றுக் கொள்ள முடியாமல், வேண்டுமென்றே அவதூறு செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் பல்வேறு விபரங்கள் தெரிவித்து புகார் மனுவினை மறுப்பு தெரிவித்துள்ளார். பொறியாளரின் எழுத்து பூர்வ மறுப்பு அறிக்கை இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், நகரளவர் ஆவணங்களின் அடிப்படையில் நகல்கள் இவ்வலுவலக நகரமைப்பு அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே புகார் மனுதாரர் திரு. வ. கணேசன் என்பவரது மனையிடத்தை ஆக்கிரமிப்பு செய்து நகராட்சி சாலை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள புகார் மனுவின் மீது நகரளவு ஆவணங்கள் மற்றும் பொறியாளரின் அறிக்கையின்படி மேல்நடவடிக்கை தொடராமல், மனுதாரரின் புகாரை ரத்து செய்ய தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 20.01.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 08.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. வ. கணேசன் என்பவர் 20.01.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''எனக்கு சொந்தமான தேவகோட்டை நகரம், பிளாக் –17, வார்டு K. சர்வே எண்.5/3 இடத்தின் விஸ்தீரனத்தில், தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தினர் புதிதாக சிமெண்ட் சாலை அமைத்து, இட ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இது தொடர்பாக, தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அளித்த புகார் மனுக்கள்மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் தொடர்பில் இம்முறைமன்ற நடுவத்தினை நாடி, தக்கதொரு நடவடிக்கை எடுக்க முறையிட்டதன் பேரில், நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் இனறு ஆஜரான சுகாதார ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் அவர்கள், முறைப்படி நில அளவர் மூலம் என்னையும் உடன் வைத்து அளந்து சம்மந்தப்பட்ட இடத்தில் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தின் ஆக்கிரமிப்பை அகற்றி தர ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இதனை ஏற்று இம்முறை மன்ற நடுவம் தக்கதொரு தீர்வை எட்ட, நடவடிக்கை எடுக்க வேண்டும்படி மிகத்தாழ்மையுடன் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி ஆணையாளரின் 13.01.2025 நாளிட்ட கடிதத்தில் 21.01.2025 அன்று அரசு சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளதால், தனது சார்பாக தேவகோட்டை நகராட்சியில் சுகாதரா அலுவலராக பணிபுரியும் திரு. ரா. ரவிச்சந்திரன் என்பரை விசாரணையில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 20.01.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் தேவகோட்டை நகராட்சியின் சுகாதரா அலுவலர் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவர் குறிப்பிடும் புல எண்.K/17/66 என்ற Survey எண்படி அவர்கள் குறிப்பிடும் சாலையில் நகராட்சியில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

மேற்கண்ட இடமானது கடந்த 50 ஆண்டுகளாக பாதையாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த இடமானது நகரத்தார்களால் இலவசமாக தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பூஸ்திதி பாதை என தேவகோட்டை நகராட்சி அலுவலக நகர்சார் ஆய்வாளரால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சாலையானது ஏற்கனவே இருந்த சாலையில் மீண்டும் சிமெண்ட் சாலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இச்சாலையில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை என வாக்குறுதியளிக்கிறேன்.

ஆக்கிரமிப்பு இல்லையென உறுதி செய்ய மனுதாரர் முன்னிலையில் நகர் சார் ஆய்வாளர் மூலம் இடத்தை அளந்து 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையரின் 03.03.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“தேவகோட்டை நகராட்சியின் சுகாதார அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு சாலை அமைக்கப்பட்ட இடம் ஏற்கனவே அளந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது போல நகர சார் ஆய்வாளரால் மனுதாரர் முன்னிலையில் ஒருமாத காலத்திற்குள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை அளந்து காண்பித்து மனுதாரரின் இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என உறுதி செய்ய வேண்டும் என தெரிவித்ததைத் தொடர்ந்து நகர சார் ஆய்வாளரால் நகர கணக்குகள் மற்றும் பிளாக் வரைபடங்கள் ஆகியவற்றுடன் 19.02.2025 அன்று மனுதாரர் திரு. வ. கணேசன் மற்றும் நகராட்சி உதவி பொறியாளர் (திட்டம்), இளநிலை பொறியாளர் (திட்டம்) ஆகியோர் முன்னிலையில் புல அளவு செய்து காண்பிக்கப்பட்டது. நகர சார் ஆய்வாளர் அறிக்கையில் அளந்து காண்பிக்கப்பட்ட புலமானது (தார் சாலை, சிமெண்ட் சாலை) தேவகோட்டை நகர அளவு ஆவணங்களில் K/17/40-0.0290 ச.மீ–பூஸ்திதி பாதை (சாலை) மற்றும் K/17/41-0.0500 ச.மீ–பூஸ்திதி பாதை என தாக்கலாகியுள்ளது. மேற்கண்ட புலங்கள் ஸ்தலத்தில் பாதையாகவும் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தால் தார் சாலை அமைத்தும், சிமெண்ட் சாலை அமைத்தும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்ற விவரம் மனுதாரருக்கு அளந்து தெரிவிக்கப்பட்டது.

எனவே, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், நடுவர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மனுவில் குறிப்பிட்ட சாலை அமைக்கப்பட்ட இடம் அளவீடு செய்து காண்பிக்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்’’ என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான சுகாதார அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் திரு. வ. கணேசன் என்பவர் தேவகோட்டை நகரம், பிளாக் –17, வார்டு K. சர்வே எண்.5/3 இடத்தின் விஸ்தீரனத்தில், தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தினர் புதிதாக சிமெண்ட் சாலை அமைத்து, இட ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் எனவும், நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் இன்று ஆஜரான சுகாதார ஆய்வாளர் முறைப்படி நில அளவர் மூலம் தன்னையும் உடன் வைத்து அளந்து சம்மந்தப்பட்ட இடத்தில் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தின் ஆக்கிரமிப்பை அகற்றி தர ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுளள சாலை நகர்மன்ற ஒப்புதல் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் மூலம் நிர்வாக அனுமதி பெற்று உரிய முறையில் ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ளபட்டுள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது. எனினும் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று நகர சார் ஆய்வாளரால் நகர கணக்குகள் மற்றும் பிளாக் வரைபடங்கள் ஆகியவற்றுடன் 19.02.2025 அன்று மனுதாரர், நகராட்சி உதவி பொறியாளர்(திட்டம்), மற்றும் இளநிலை பொறியாளர் (திட்டம்) ஆகியோர் முன்னிலையில் புல அளவு செய்து மனுதாரர்க்கு காண்பிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட புலங்கள் ஸ்தலத்தில் பாதையாகவும் தேவகோட்டை நகராட்சி நிர்வாகத்தால் தார் சாலை அமைத்தும், சிமெண்ட் சாலை அமைத்தும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரியவருகிறது. எனவே, தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்று இப்பொருள் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 25–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. வ. கணேசன்,
கதவு எண்.12–ஜி, கைலாசநாதபுரம் மேற்கு,
தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
தேவகோட்டை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்